உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை – திரு **பி.முத்தையன் பி.இ.,**

ந.க.எண்.1046/2012/திஉ திகு–2 நாள் 21/6/2013.

பொருள் கட்டிடம்–திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டப் பகுதி–திருச்சிராப்பள்ளி மாநகராட்சி–அரியமங்கலம் கோட்டம் மற்றும் கிராமம்–புதிய வார்டு ஏபி–பிளாக் எண்.7–ந.அ.எண்.111 முதல் 123 வரை சங்கிலியாண்டபுரம் மெயின் ரோடு–9821 சமீ பரப்பளவு உள்ள மனைக்கு ஒப்புதலும் மற்றும் ஸ்டில்ட் தளம் மற்றும் 4 தளங்கள் கொண்ட பிளாக் ஏ, பி,சி–ல் மொத்தம் 196 குடியிருப்புகள் கொண்ட கட்டிடம் கட்ட இசைவும் பெறப்பட்டது–திட்ட அனுமதி உத்தரவிடப்படுகிறது.

பார்வை

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண்.எப்1/5836/2011 அரிய (மையம்) நாள் 27.6.2012
2. மனுதாரர் திரு ஆனந்த் என்பவரது விண்ணப்பம் நாள் 4.7.12, 10.7.12, 17.7.12, 22.11.12, 25.2.13 மற்றும் 20.6.13.
3. அரசாணை எண்.22 மற்றும் 86 வீ.வ மற்றும் ந.பு.வ.துறை நாள் 25.1.08 மற்றும் 28.3.12
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.9278/2007 பிஏ1 நாள் 25.8.2007,11.1.2008, 13.2.2008 மற்றும் 10.4.2008
5. திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண்.108 நாள் 26.12.02.
6. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.26294/10 எல்ஏ2 நாள் 20.12.2010
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணைக் கடிதம் ந.க.எண்.16000/12 சிபி நாள் 2.12.2012.

உத்தரவு

திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டப் பகுதி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம் மற்றும் கிராமம், புதிய வார்டு ஏபி, பிளாக் எண்.7, ந.அ.எண்.111 முதல் 123 வரை சங்கிலியாண்டபுரம் மெயின் ரோடு, 9821 சமீ பரப்பளவு கொண்ட மனைக்கு 1 to 19 என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில்

S.No.	Description	Block A			Block B			Block C		
		FSI	Non FSI	No.of units	FSI	Non FSI	No.of units	FSI	Non FSI	No.of units
1.	Stilt Floor area	--	1639.16	Parking	--	1356.65	Parking	--	1638.89	Parking
2.	First Floor area	1522.12	6.12.	18.	1284.12	5.30	14	1531.71	6.22	17
3.	Second Floor area	1522.12	6.12.	18.	1284.12	5.30	14	1531.71	6.22	17
4.	Third floor area	1522.12	6.12.	18.	1284.12	5.30	14	1531.71	6.22	17
5.	Fourth Floor area	1522.12	6.12.	18.	1284.12	5.30	14	1531.71	6.22	17
6.	Head Room area	--	57.04	--	--	56.26	--	--	60.92	--
	Total			72			56			68

Total No.of dwellings = 196 dwelling units

O.S.R = 985.20 sq.m

(திருச்சி மாநகராட்சி ஆணையரிடம் மனுதாரர் பத்திர ஆவணம் எண்.935/2013 நாள் 19.2.13ல் OSR ஒப்படைத்துள்ளார்)

மேற்கண்ட உத்தேச தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல் நிபந்தனைகளுடன் கட்டிட/திட்ட அனுமதி வழங்க இசைவளிக்கப்பட்டுள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ. எண்.269/2012 என எண்ணிடப்பட்டுள்ளது. மேலும் பார்வை 5ல் கண்ட திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழும தீர்மானத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வினை செயல்படுத்தி கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண்.46/2013 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை

1. EIA Clearance should be obtained before commencement of the construction
2. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations
3. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மைச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
4. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover structural stability aspects including the safety during the construction which are covered under

the Building Rules under the Local bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

நிபந்தனைகள்

1. உத்தேச தொகுப்பு குடியிருப்பு அடுக்குமாடி உபயோக கட்டுமானத்திற்கு Solar Water heating system அமைக்கப்பட வேண்டும்.

2.வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3.மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138 ந நி (ம) கு.வ.துறை நாள் 11.10.2002ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், குடியிருப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9. அரசாணை எண்.341 ந.நி (ம) கு.வ. (ந.நி.1) துறை நாள் 3.11.04ன்படி செப்டிக் டேங்கில் U trap அமைத்தல் வேண்டும்.

10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly ash bricks மற்றும் materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் விளம்பரப் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்தரவு மற்றும் இவ்வாணையின் நகல் ஒவ்வொரு வீட்டையும் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

13. பார்வை 3 மற்றும் 4ல் காணும் அரசாணை மற்றும் சுற்றறிக்கையின்படி உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி மொத்த கட்டணம் ரூ.32,62,400/– (ரூபாய் முப்பத்து இரண்டு லட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து நானூறு மட்டும்) உரிய கணக்கு தலைப்பில் 20.6.2013அன்று செலுத்தப்பட்டு அசல் ரசீது பெறப்பட்டுள்ளது.

14. நன்னிலை வரி ரூ.19900/– (ரூபாய் பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ரூ.1,36,100/– (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தாறாயிரத்து நூறு மட்டும்) உரிய கணக்குத் தலைப்பில் 20.6.2013 அன்று செலுத்தப்பட்டு அசல் ரசீது பெறப்பட்டுள்ளது

திட்ட அனுமதி உத்தரவு, முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் ஆகியன இரண்டு நகல்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றன.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரை அணுகிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

21/6/13

உறுப்பினர் செயலர்

21/06/2013

21/6/13

இணைப்பு

1. திட்ட அனுமதி உத்தரவு–1
2. முத்திரையிடப்பட்ட வரைபடங்கள்–இரு தொகுப்புகள்.

பெறுநர்

ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

நகல்

திரு எம்.ஆனந்த், சி 11 முதல் தளம், 3வது கிராஸ், மேற்கு விஸ்தரிப்பு, தில்லை நகர், திருச்சி 18.

இணைப்பு

1. திட்ட அனுமதி உத்தரவு –1